# முஸ்லிம் குறுங்கால ஆவணங்களை/துண்டுபிரசுரங்களை ஆவணப்படுத்தல் செயற்றிட்ட அறிக்கை - 2023

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | முஸ்லிம் குறுங்கால ஆவணங்களை / துண்டுபிரசுரங்களை  ஆவணப்படுத்தல் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2022/0004 |
| செயற்றிட்ட இடம் | கிழக்கு மாகாணம் |
| செயற்றிட்டக் காலம் | ஒரு வருடம் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | டொரன்டொ பல்கலைக்கழகம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | நூலகப் பணியாளர்களும் தன்னார்வலர்கள் |
| பாதீடு (Budget) | 1,175,510.00 |

அறிமுகம்

இச் செயற்றிட்டமானது முஸ்லிம் மக்களது கலை, வாழ்வியல் மற்றும் அரசியல், கலாசாரம் போன்றவற்றைப் பாதுகாத்து ஆவணப்படுத்தலை முக்கிய நோக்கமாகக் கொண்டதாகும். இச் செயற்றிட்டமானது இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் மக்களை மையமாகக்  கொண்டு அமைந்தது.

இம் மாகாணமானது முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும். இவர்களின் வாழ்வியல் அம்சங்கள் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகையில் குறிப்பிட்ட சில விடயங்களில் தனித்துவமானவையாகக்  காணப்படுகின்றன. குறிப்பாக இவர்களின் பேச்சுவழக்கு, நாட்டாரியல் கூறுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இலங்கைத் தமிழ் இலக்கியப் பங்களிப்பில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வகிபாகம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது. குறித்த ஒரு சில எண்ணிக்கையானவர்களைத் தவிர அனைவரும் சுன்னி பிரிவினராகவும் ஸாபி சிந்தனைப்பள்ளியைச் சார்ந்தவர்களாகவும் உள்ளனர். இங்குள்ள முஸ்லிம் மக்கள் தங்களைப் பள்ளிவாசல் வாரியாக பகுத்துக் கொண்டுள்ளனர். இது ‘மஹல்லா’ எனப்படும். குறித்த மஹல்லா பகுதியைச் சார்ந்தவர்களின் திருமணம், மரணம் மற்றும் அத்தாட்சிப்படுத்தல், சிறு பிணக்குகளை சமரசப்படுத்தல், மார்க்க வழிகாட்டல் போன்றவற்றிற்கு குறித்த மஹல்லா

பொறுப்பாக அமையும். அதே போன்று வெள்ளிக்கிழமை விசேட கூட்டுத்தொழுகைக்காக பல மஹல்லாக்கள் ஒன்று சேர்ந்து தெரிவு செய்யப்பட்ட சில விசாலமான பள்ளிவாசல்களில் ஜூம்ஆத் தொழுகையும் வெள்ளிக்கிழமைப் பிரசங்கமும் நடைபெறும்.

இவ் ஒன்றுகூடல் நிகழ்வு முஸ்லிம்களிடையே ஒரு வாராந்தப் பெருநாள் போல வர்ணிக்கப்படுவதுண்டு. விற்பனை நிலையங்களும் குறித்த நாளின் மதியத்திலிருந்து மூடப்பட்டிருக்கும். இது ஒரு ஓய்வு நாளாகவும் கருதப்படுகின்றது. இந்த வெள்ளிக்கிழமை ஒன்றுகூடல்களில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படும் ஒரு மரபு நிலவி வருகின்றது. குறிப்பிட்ட இடத்தை வாழ்விடமாக கொண்ட மக்கள் மற்றும் அனைத்து குடும்பத்தலைவர்களும் ஒரே இடத்தில் சேரும் இந்நிகழ்வை இவ்வாறு தகவல் பரிமாற்றத்திற்கு பயன்படுத்தும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகின்றது.

இந்தத் துண்டுப்பிரசுரங்கள் பலவகைப்படுகின்றன. அவையாவன;

- வாழ்த்துப்பாக்கள்
- வாழ்த்துச் செய்திகள்
- இரங்கற்பாக்கள் , சரமகவிகள்
- பொது அறிவித்தல்கள்
- பொது அழைப்பிதழ்கள்
- திறந்த கடிதங்கள்
- விளம்பரங்கள்
- அரசியல் தேர்தல் விஞ்ஞாபனங்கள்
- தனிப்பட்டவர்களின் தன்னிலை விளக்கக் கடிதங்கள்

இவ்வாவணங்கள் குறுகிய கால நோக்கில் தயாரிக்கப்படுபவை, உடன் வாசித்து வீசுபவையாக அல்லது ஒரு குறுகிய காலத்திற்குள் மட்டும் பேணுப்படுபவைகளாக காணப்படும். அத்துடன் இவை தயாரிக்கப்படும் காகிதப்பொருட்கள் மலிவானவையாகவும் குறுங்காலப் பயன்பாட்டுக்குமானவை. ஆதலால் காலக்கிரமத்தில் இலகுவில் சிதைவடையக்கூடியவையாகக் காணப்படுகின்றன. இதனால் இக் குறுங்கால ஆவணங்களை எண்ணிமப்படுத்தி பாதுகாப்பதற்கான அவசியமுள்ளது.

செயற்றிட்ட நோக்கம்

- மொழியியல் மாற்றங்களை அறிந்து கொள்ளுதல் - பல்வேறு புழக்கத்தில் மறைந்த வார்த்தைகள் மற்றும் எழுத்துருக்களை கண்டுகொள்ள முடியும்.
- அறிக்கைகள் கடிதங்களின் அமைப்பு முறையில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து கொள்ள முடியும்
- நிகழ்வுகள், வரலாற்று சம்பவங்களின் திகதிகளை சரியாக அறிந்து கொள்ளமுடியும்.
- பிரமுகர்கள், ஆளுமைகள் தொடர்பான ஆவணப்படுத்தப்பட்டிருக்காத தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.
- நோன்புகால பிரச்சாரங்களில் நாட்காட்டிகளில் சூரிய உதய அஸ்தமன நேரங்கள் போன்றவற்றை அறிந்து கொள்ள முடியும்.
- பழைய அச்சகங்களின் பெயர்கள், முகவரிகளை அறிந்து கொள்ள முடியும்.
- கவிஞர்கள், எழுத்தாளர்களை அடையாளம் காண முடியும்.
- மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை கொண்டாட்டங்களை ஆவணப்படுத்த முடியும்.

அடைவுகள்

- இச் செயற்றிட்டத்தினூடாக ஒரு வருட காலப்பகுதியில் 2,711 குறுங்கால ஆவணங்கள் எண்ணிமப்படுத்தப்பட்டுள்ளன. இவ் குறுங்கால ஆவணங்களின் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை 5,955 ஆகும்.
- இச் செயற்றிட்டத்தினூடாக கிழக்கு மாகண முஸ்லிம் மக்களின் அரசியல், வாழ்வியல் மற்றும் காலசாரத்தில் ஏற்பபட்ட மாற்றங்களை கால மாற்றத்தோடு அவதானிக்கக் கூடியதாக அமைந்தது.
- பெரிதும் அறியப்படாத கவிஞர்கள், அரசியல்வாதிகள், கல்விப் பிரபலங்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இச் சேகரிப்புகளினூடாக அறியப்பட்டனர்.

எதிர்கொண்ட சாவல்கள்

- நூல்கள் போன்று அல்லாது துண்டுப்பிரசுரங்களை சேகரித்து வைக்கும் சேகரிப்பாளர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்பட்டமை.
- புதிய சேகரிப்புக்களை உரிய காலத்தில் கள ஆய்வாளரால் இனங்காண முடியாமையால், எதிர்பார்த்த வகையில் வலையமைப்புகளை ஏற்ப்படுத்த முடியாமை.

- இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக காகிதங்களில் துண்டுப்பிரசுரங்களை பிரசுரித்து வெளியிடும் வீதமானது குறைவடைந்து, டிஜிட்டல் ஆவணங்களே முகநூல் மற்றும் ஏனைய வலைத்தளங்களில் விளம்பரங்களுக்காக வெளியிடப்படத் தொடங்கியமை குறிப்பிட்டு சொல்லக்கூடிய ஒரு சவாலாக அமைந்தது.
- சேகரிப்பு வைத்திருப்பவர்கள் தங்கள் இடத்தில் வைத்து எண்ணிமப்படுத்தும் படி கோரிக்கை விடுத்ததன் காரணமாக கள ஆய்வாளர்கள் அங்கு சென்று எண்ணிமப்படுத்த வேண்டியமைந்தது. இதன் காரணமாக கணிசமான அளவு நேரம் அதில் செலவிடப்பட்டது.

கற்பித்தல்களும் பரிந்துரைகள்

- இச்செயற்றிட்டத்தினூடாக அச்சிட்டு வெளியிடப்படும் துண்டுப்பிரசுரங்களை மட்டுமல்லாது Born digital ஆவணங்களையும் ஆவணப்படுத்தல்.
- கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களையும் உள்வாங்கி அங்குள்ள துண்டுப்பிரசுரங்களையும் தேடி ஆவணப்படுத்தல்.
- சேகரிப்பாளர்களை மட்டும் சாராது பிரசுரங்களுடனும் நேரடியாகத் தொடர்புகளை மேற்கொண்டு ஆவணகங்களை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை எடுத்தல்.
- நூலக நிறுவனத்தினூடாக முன்னெடுக்கப்படும் முஸ்லிம் ஆவணகம் மற்றும் பிராந்திய செயற்றிட்டங்களூடாக இக் குறுங்கால ஆவணங்களை தொடர்ச்சியான விதத்தில் சேகரித்து எண்ணிமப்படுத்தல்.

பின்னிணைப்பு

http://tinyurl.com/y5t9j9xs